<u>07-01-2025</u>

<u>MCOP. No. 217/2022</u>

<u>ம.சா. 1 – திரு. முத்துகிருஷ்ணன்</u>

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திருமதி. வனிதா, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>1ம் எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினர்</u>

<u>சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டுள்ளார்.</u>

<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

விபத்து சமயத்தில் நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனமானது வடக்கு – தெற்கு பக்கம் ஓட்டிச்சென்றேன். என் மீது இடித்ததாக சொல்லப்படும் ஆட்டோவானது மேற்கு – கிழக்கு பக்கம் வந்தது. விபத்து சமயத்தில் நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்திற்கு உரிய தகுதி சான்று மற்றும் இன்சூரன்ஸ் பாலிசி இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தினால் எனக்கு தலை, கால் ஆகிய இடங்களில் அடிபட்டது. எனக்கு தலையில் தான் அதிகமாக அடிப்பட்டது என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றபோது தலைகவசம் அணிந்திருந்தேனா என்றால் நினைவில்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும், நான் விபத்து சமயத்தில் தலைகவசயம் அணியாமல் சென்றதால் தான் எனக்குதலையில் அதிகமாக காயம்ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் என்னை எந்த மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்றால் நான் அந்த சமயத்தில் சுயநினைவில் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ 2 மற்றும் ம.சா.ஆ-3 நகலாக இருப்பதால் அதன் உண்மைதன்மையை நிரூபிக்க தகுந்த நபர்களை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால உள்ளேன். நான் விபத்து சமயத்தில் எனது இருசக்கர வாகனத்தை கவனமில்லாமலும், அதிவேகமாகவும் ஓட்டிச்சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் மெதுவாகவும்,

சாலைவிதிகளை கடைபிடித்தும் கவனமாகவும் தான் ஆட்டோவை ஓட்டிவந்தார் என்றால் சரியல்ல. நான் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின் உரிமையாளரை கட்சிக்காரராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு அதுபற்றி தெரியாது. நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளரை இவ்வழக்கின் கட்சிக்காரராக சேர்க்காததால் இவ்வழக்கானது கட்சிக்காரரை சேர்க்காத தோசத்திற்காக தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்து சமயத்தில் என்ன வேலை செய்துவந்தேன் என்றால் நான் மல்லிகைப் பூ  விவசாயம் செய்துவந்தேன். நான் விபத்து சமயத்தில் மல்லிகைப் பூ விவசாயம் செய்துவந்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மனுவில் சொல்லியுள்ளபடி மாதம் ரூ.30000/– சம்பாதித்ததை நிரூபணம் செய்ய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றும் நான் எனது மனுவில் பூ வியாபாரம் செய்ததாக தான் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்காக எனக்கு எந்தெந்த மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்பட்டது என்றால் முதலில தேனி நட்டாத்தி நாடார் மருத்துவமனை, பின்னிட்டு மதுரை ஞானாஜோசப் மருத்துவமனை, அதன்பிறகு மதுரை மீனாட்சி மிஷன் ஆகிய மருத்துவமனைகளில் சிகிச்சை வழங்கப்பட்டது. மேற்படி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றதற்கான விடுவிப்பு அறிக்கையோ, காயச்சான்றிதழோ இந்த வழக்கில் நான் தாக்கல்செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு பிறகு இதுவரை நான் தொடர் சிகிச்சையில் இருந்து வருகிறேனா என்றால் இல்லை. ஏதேனும் வலி இருந்தால் நான் இடையில் சிகிச்சைக்கு செல்வேன். என்னால் சாதாரண  நபர்கள் செய்யும் அனைத்து வேலைகளையும் என்னால் செய்யமுடியும் எனறு சொன்னால் சரியல்ல. விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனமோ, வருமான இழப்போ ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ நான் கோரியுள்ள நஷ்டஈடு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான்என்னுடைய வாகனத்தை தகுதி சான்று இல்லாமலும்,  பாலிசி இல்லாமலும் , தலைகவசம் அணியாமலும் ஓட்டிச்சென்றதால் என்னுடைய

**கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டதாலும் இந்த 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.**

**மறுவிசாரணை – இல்லை.**

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

Digitally signed by G N SARAVANAKUMAR
Date: 2025.01.07 19:35:08 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 07-01-2025